பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 24 ஷஃபான் 22 இதழ்: 178

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8-8-77

யாழ். ரோட்டரி காணிவல்

இலவசக் காட்சிகள்

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்

30-7-77 — 10-8-77

● திகிலூட்டும் நெருப்பில் பெண்ணின் பயங்கரபாய்ச்சல், ● 'பப்பட்' காட்சி ● கரகாட்டம் ● மாயா ஜால வித்தைகள் ● பொப் நிகழ்ச்சிகள்.

தினமும் நடைபெறும். 6764

## வட இந்தியாவில் வெள்ளம்; 500க்கு மேலான கிராமங்கள் நீரில்மூழ்கின!

புதுடில்லி ஆக. 7

வட இந்தியாவில் வெள்ள நிலைமை மிக மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது என அறிவிக்கப்படுகிறது.

யமுனை ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களிலும் மேற்கு, வடக்கு டில்லியிலும் வெள்ள நிலைமை கடுமையானதாக இருக்கிறது என்றும் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் விமான மூலம் வெள்ள நிலைமைகளை அவதானித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல கொலனிகளும் சுமார் 500 கிராமங்களும் நீரில் மூழ்கிவிட்டன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வெள்ள நிலைமை கடுமையாக உள்ள பகுதி மக்கள் தத்தம் குடியிருப்பு இடங்களைக் காலி செய்து விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும், பொலிசாரும் வெள்ள அபாயத்தினின்றும் மக்களை காப்பாற்று

(6ம் பக்கம் பார்க்க)

# "எதிர்க்கட்சித் தலைமையால் மட்டும் விடுதலை கிடையாது"

## பலாலி வரவேற்பில் 'அமிர்'

- க. ரவீந்திரன் -

யாழ்ப்பாணம், திங்கள்

"இன விடுதலைப் போராட்டங்களில் நாம் முன்செல்லத் தயாராய் இருக்கிறோம். எமக்கிடையில் பிளவுகள் ஏற்படுத்த எந்தத் தீயசக்திகளுக்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை."

நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்தில் தமக்கு வரவேற்பளிப்பதற்காகத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் உரைநிகழ்த்துகையில் திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார். எதிர்க்கட்சித் தலைமையால் மட்டும் இன விடுதலை கிடைக்கப்போவதில்லை என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

தேசிய அரசுப் பேரவை எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வருகை தந்த திரு. அ அமிர்தலிங்கத்துக்கு பலாலிவிமான நிலையத்தில் அமோகவரவேற்பு அளிக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான இளைஞர்களும், பெண்களும், பிரமுகர்களும் விமான நிலையத்தில் காணப்பட்டனர். திரு. அமிர்தலிங்கத்துடன் அவரது துணைவியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும் வந்திருந்தார்.

"ஆட்சிமன்ற எதிர்க் கட்சித் தலைமைமட்டும் எம் இனத்திற்கு விடுதலையைத் தேடித் தரமுடியாது. இன விடுதலையில் இளைஞர்களுடன் இணைந்து தமிழ் எம். பி. க்கள் அனைவரும் போராடுவோம்" என்றார் திரு. அமிர்தலிங்கம்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது;-

இந்தவிதமான வரவேற்பைப் பொறுத்தவரையில் நான் எதையும் சாதித்துவிடவில்லை. ஆயினும் உங்கள் அன்புப் பெருக்கினால் இத்தகையதொரு வரவேற்பை எனக்களித்துள்ளீர்கள். நாம் கொண்டுள்ள இலட்சியத்தில் மேலும் அதிக ஊக்கப்படுத்தவே இவ்வரவேற்பை அளிக்கிறீர்கள. பாராளுமன்ற சரித்திரத்தில் எதிர்க்கட்சியாக ஒரு தமிழ்க்கட்சி வந்துள்ளது. அதுதான் உண்மையான எதிர்க்கட்சி உலகிற்கு உணர்த்தத்தக்கதொருசந்தர்ப்பத்தை ஆண்டவன் நமக்களித்துள்ளான் எமக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைத்ததையிட்டு சிங்கள மக்கள் மனம் புழுங்குகிறார்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளால் நாம் சுதந்திரம் பெற்றுவிடமுடியாது. முழு உலகமுமே தமிழர் இந்தநாட்டில் போராடிக் கொண்டிருக்கிறது என்பதை உணரச் செய்துவிட்டார்கள். நேற்று முன்தினம்கூட அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த தொலைக்காட்சிநிருபர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் என்னைப் பேட்டி கண்டனர். இந்தப் பேட்டிக்கானகாரணம் இந்த நாட்டில் எதிர்க்கட்சித் தலைமையைத் தமிழர் ஒருவர் பெற்றிருப்பது தான். இந்த எதிர்க்கட்சிப் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டதன்மூலம்தான் இந்த நாட்டில் ஒரு இனம் விடுதலை வேட்கைகொண்டு போராடி வருகிறது என்பதைத் தன் நாட்டிற்கு எடுத்துக்காட்டக் கூடியதாக இருக்கும் என்று அந்த நிருபர் எனக்கு விளக்கினார். அதேநேரம் எமது இனம் தனது சுதந்திரத்திற்காகப் போராடுவதற்கு இளைஞர்களைத் தயாராக்கிப்

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

வெள்ளவத்தையில் நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 625வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவதுபரிசு

12 U 0860

ரூ.1,00,000

இரண்டாவது பரிசு

38 Y 0312

ரூ.40,000

மூன்றாவது பரிசு

17 N 0472

ரூ.10,000

தலா 1,088 ரூபா ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

01 A 0417 06 A 0344

(6ம் பக்கம் பார்க்க)

## சங்கக்கடையில் மல்லியை விலை கூட்டிவிற்றாராம்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

கால் றாத்தல் மல்லி 40 சதமாக விற்பனை செய்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளருக்கெதிராக கூட்டுறவு ஆணையாளரும் விலைக் கட்டுப்பாட்டதிகாரியும் நடவடிக்கை எடுத்துள்ளனர்

கால் றாத்தல் மல்லியை 3 சதம் விலை கூட்டி பற்றுச்சீட்டு எழுதிப்பணம் பெற்றதாக ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை முகாமையாளர் ஒருவருக்கெதிராகச் செய்யப்பட்ட புகாரை தொடர்ந்து அதிகாரிகள் இதை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க உடன் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பட்டின சபை உறுப்பினர் ஒருவர் செய்து கொண்ட புகாரின்மீது இக்குற்றச் சாட்டின்மீது விசாரணை நடைபெறுகிறது.

## 'ஹதி'யின் பதவிக் காலத்தில் 25,000 அரசியல் இடமாற்றம்

கொழும்பு, ஞாயிறு

முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்தின் பதவிக் காலத்தில் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் உட்பட 25 ஆயிரம் ஊழியர்கள் அரசியல் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் இடமாற்றம் செய்யப்பட்ட கல்வித்திணைக்கள ஊழியர்களின் விவகாரம் குறித்து ஆராய்வதற்காக கல்வி அமைச்சு விசேஷ சபை ஒன்றை நியமித்துள்ளது

அரசியல் இடமாற்றங்களினால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தாம் விரும்பும் இடத்திற்குச் செல்ல விரும்பும்பட்சத்தில் இந்தச் சபைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அந்த அதிகாரி கூறினார். (க,

அளவெட்டிக் கொள்ளை:

## நால்வர் ரிமாண்டில்; பெருமளவுபொருட்கள்மீட்பு

யாழ்ப்பாணம், திங்கள்

இரவு வேளை வீட்டுக்காரரை வாயில் பலவந்தமாக துணியைத் திணித்து அபயக்குரல் எழுப்பவிடாது செய்துவிட்டு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துணிகரக் கொள்ளைச் சம்பவம் பற்றிய மர்மங்கள் பொலிசாரின் துரித புலன் விசாரணைகளால் துலங்கத் தொடங்கியுள்ளன.

அளவெட்டியைச் சேர்ந்த என். துரையப்பா என்பவரது வீட்டிற்குள் சம்பவ தினம் இரவு திடீரெனப் புகுந்த நால்வர் அடங்கிய கோஷ்டி ஒன்று தங்கநகைகள் உட்பட சுமார் 5000 ரூபா பெறுமதி மிக்க பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றதாக சுன்னாகம் பொலிஸில் புகார்செய்யப்பட்டிருந்தது. கொள்ளையடிக்கையில் இனந்தெரியாத பிரஸ்தாப நபர்கள் தமது வாயில் துணியைத் திணித்துவிட்டதாக முறைப்பாட்டுக்காரர் தமது புகாரில் தெரிவித்திருந்தார்.

இப்புகார் பற்றிய புலன் விசாரணைகளில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் இ. ஏ. ஏ. காதர் துரிதமாக ஈடுபட்டார் இதன்பலனாக மூன்று சந்தேகநபர்கள் சங்கானையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். கொள்ளை போன நகைகளும் துணிவகைகளும் பெருமளவில் கைப்பற்றப்பட்டனவாம்.

வி, நித்தியானந்தன், கே. செல்வராஜா, பி, கிருஷ்ண பிள்ளை என்ற பிரஸ்தாப மூன்று சந்தேக நபர்களும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரட்ணம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். இவ்வேளையில் விக்னேஸ்வரன் என்ற நபரும் சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி கலைக்கப்படுமாம்

### கட்சி புனரமைக்கப்படும் என்றும் கூறுகிறார் குமார்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி கலைக்கப்பட இருக்கிறது.

இத்தகவலை அம்முன்னணியின் தலைவர் திரு. குமார். பொன்னம்பலம் தெரிவித்தார்.

திருநெல்வேலி காளிகோவிலடியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே திரு பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியைக் கலைத்துவிட்டு தமிழ்க்காங்கிரஸ் கட்சியை மீண்டும் புனரமைப்புச் செய்வதில் தாம் தீவிரமாக ஈடுபடப்போவதாகவும் சகலதொகுதிகளிலும் ஆதரவாளர்களைத் திரட்டி கிளைகளை அமைத்து காங்கிரஸ்

(6ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று தெரிவித்து அவைகளை நீக்கி, நன்னெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம நண்பர்கள்,

- ஔவையார்

ஈழநாடு
THE EELANAADU

## மது ஒழிப்பு

புதிய மதுபானக் கடைகள் திறப்பதற்காக அனுமதிப் பத்திரங்களை இனிமேல் வழங்குவதில்லை என்ற அரசின் முடிவை இந்நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அனைவருமே பாராட்டி வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

களனியாவில் அப்பகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் வேண்டுகோளின்பேரில் இரு மதுபானக் கடைகளின் அனுமதிப் பத்திரங்களை ஏற்கனவே ரத்துச்செய்துவிட்டதாகவும், எதிர்க்கட்சியில் அல்லது அரசாங்கக் கட்சியில் இருக்கும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் எவரும் கேட்டுக்கொண்டால் எதிர்காலத்தில் அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்யத் தாம் தயாராய் இருப்பதாகவும் நிதியமைச்சர் திரு. ஜெனி டிமெல் அறிவித்திருக்கிறார். அவர் அத்துடன் நிற்கவில்லை; 'இந்த நாட்டு மக்களை மேலும் மேலும் குடிப்பழக்கத்தில் மூழ்கடிக்க நாம் விரும்பவில்லை, இந்தக் கெடுதல்களிலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்பது எமது கடமை' யென்றும் அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

தர்ம ஆட்சியொன்றை இந்த நாட்டில் பரிணமிக்கச்செய்வதற்குப் பிரதமர் எடுத்திருக்கும் சபதத்திற்கு நிதியமைச்சரின் இம்மாதிரி நடவடிக்கைகள் உறுதுணையாக அமையக்கூடுந்தான். ஆனால் மதுபானக் கடைகளின் அனுமதிப் பத்திரங்களை ரத்துச்செய்வதன் மூலம் மாத்திரமே மதுபானம் அருந்தும் பழக்கத்தை ஒழித்துவிடமுடியுமா என்பது ஒரு பிரச்னைக்குரிய கேள்வி.

"இதனை உடனடியாகச் சாதிப்பது சாத்தியமில்லைத்தான். ஆனால் எம்மால் முடிந்த அளவு செய்வோம்" என்று அமைச்சரே கூறுகின்றார்.

நமது நாட்டில் பெரும்பான்மையானவர்களின் சமயமான பௌத்தம், மதுபானத்தை ஆதரிக்கவில்லை. ஏனைய சமயங்களும் மதுபானத்தினால் மக்கள் கெட்டழிந்துபோவதை ஏற்றுக்கொள்ளவில்லை. மதுபானத்தினால் ஏற்படும் கெடுதல்களை நம் மக்கள் உணராமலுமில்லை. இருந்தும் இதனை ஒழித்துக்கட்டமுடியாமலிருப்பது கவலைக்குரிய விஷயந்தான்.

அமைச்சர் கூறுவதுபோல் படிப்படியாகவே இதனைச் சாதிக்கமுடியும். அதனால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்புகளையும் சமாளிக்க மார்க்கம் கண்டாகவேண்டும்.

மதுபான உற்பத்தி-விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையானவர்களுக்கு மாற்றுத் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தியாகவேண்டும். இது போன்ற பிரச்னைகளைச் சமாளிக்கச் சரியான திட்டங்களை உருவாக்காமல் பலகாலமாக இருந்துவரும் ஒரு பழக்கத்தையும், அதனால் உருவான சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்களையும் நிவர்த்திசெய்வது சாத்தியமாகாது.

எல்லாவற்றுக்கும் மேலாக நம் இளம் சந்ததியினர் இத்தீய பழக்கத்தில் சிக்காதிருக்கும் வகையிலான சமூகச் சூழ்நிலைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இல்லாத பட்சத்தில் மதுப் பழக்கத்தை ஒழித்துத் தார்மீக அடிப்படையிலான புதிய சமுதாயமொன்றை உருவாக்குவதென்பது வெறும் கனவாகவே முடியும்.

## தீப்பெட்டி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

தீப்பெட்டி உற்பத்தியை அதிகரிக்குமாறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களை கைத்தொழில் அமைச்சர் திரு. ஜி. சிறில் மத்யூ பணித்துள்ளார்.

சகல தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்களும் தமது மாதாந்த உற்பத்திகளை அதிகரிக்க வேண்டுமென்றும் இதற்கான மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

## நாளை மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஸ்ரீகஜலட்சுமிகோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது

இன்று திங்கட்கிழமை காலையும் நாளைமுற்பகலும் சங்காபிஷேகமும், ஸ்ரீகஜலட்சுமிக்கு மண்டலாபிஷேக பூர்த்தியும் நடைபெறும். நாளை விசேஷ நிகழ்ச்சிகளாக பிரம்மஸ்ரீ வி. நாராயண சர்மாவின் தேவாரபாராயணமும், ஓதுவார் வி. சுப்பிரமணியத்தின் திருமுறைப் பண்ணிசையும், விசேஷ மேளக் கச்சேரியும் இடம்பெறும். (கா-அ)

## "ஊழியர் பற்றுக்குறை நீக்கப்படும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு என்னைத் தலைவராக நியமனம் செய்தபோது சிறு அச்சம் ஏற்பட்டாலும் திறமையாக இயங்கிவந்த ஒரு சங்கம் என்ற நிலையை அறிந்தபின் என்னுள் இருந்த அச்சம் தானாகவே நீங்கியது" என்று நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவராக நியமனம் பெற்ற யாழ். மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. ஏ. எம். குலநாயகம் சங்கக் காரியாலய ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இந்தச் சங்கத்தில் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினரால் விரைவில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திரட்டுக்குக் குறைவாக இங்கு பணியாளர்கள் பணி புரிவதைத் தாம் அறிவதாகவும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கு அமைய யாழ். கூட்டுறவு அமைப்பு ஆணையாளருடன் தொடர்புகொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தாம் முயற்சி எடுப்பதாகவும் கூறினார்.

பொதுமுகாமையாளர் இறேபி பெஞ்சமின் ஊழியர்களைத் தலைவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். (கு-அ)

எச். என். சீ. ஈ., என். சீ. ஜீ. ஈ.

# பாடத்திட்டங்கள் பரிசீலனை: அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

எச். என். சி. ஈ., என். சி. ஜீ. ஈ. பாடத்திட்டங்கள் குறித்து பரிசிலனை செய்யும் பொருட்டு குழு ஒன்றினை கல்வி அமைச்சு நியமிக்கவிருக்கிறது.

இக்குழுவின் சிபார்சுகள் அமைச்சினால் செயற்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, அரசியல் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நீதிவழங்கும் என்றும் அமைச்சு தெரிவித்தது.

### 4000 புதிய மாணவர்

இம்மாத இறுதிக்குள் சகல பல்கலைக்கழக வளாகங்களும் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 4000 புதியமாணவர்கள் வளாகங்களின் சேர்த்துக்கொள்ளப்பவர். (உ)

## இன்று செயல்திட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கல்வித்துறைச் செயல்திட்ட மாணவர்கள் அளிக்கும் நூற் கண்காட்சியும், நூலகக் கருத்தரங்கும் இன்று திங்கட்கிழமை கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக விஞ்ஞானக் கல்வி அலுவலர் திரு. க. பொன்னம்பலம் கலந்துகொள்கிறார். பிற்பகல் 2 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும். [கா-அ]

## நோன்புக்காக விசேஷ நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

முஸ்லிம் மக்களின் நோன்புக் காலத்தின்போது தட்டுப்பாடில்லாமல் கோதுமைத் தானியங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மா ஆலைக் கூட்டுத்தாபனம் அமைச்சரின் உத்தரவின்பேரில் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (உ)

......

## தெல்லிப்பழை துர்க்காதேவி உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நிகழும் மகோற்சவத்தில் 26ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு இரதோற்சவமும் 27-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11-30-க்கு தீர்த்தோற்சவமும் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 5-00 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறும். (கா-அ)

## யாழ்இன்சூரன்ஸ் கட்டிடம் பூர்த்தி

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்கிளையின் புதியகட்டிட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன,

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வாடகைக்கு இயங்கிய இவ்வலுவலகம் புதிய கட்டிடத்துக்கு மாற்றப்படவுள்ளது. முன்னாள் வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினாவினால் அடிக்கல் நாட்டப்பட்ட இக்கட்டிடத்தைபுதியவர்த்தக அமைச்சர் திரு.அத்துலத் லலித் முதலிதிறந்து வைப்பார் எனத் தெரியவருகிறது. (கெ-அ)

றேட்டரி காணிவலில்

## கராட்டி — சாண்டோ விளையாட்டுக்கள்

திறந்தவெளி அரங்கினிலே திரண்ட மேனியுடைய ஆணழகன் ஒருவன் தோன்றுகின்றான். ஆனைக்கோட்டை மகாஜனக் கிளப்பைச் சேர்ந்த இளம் சாண்டோ கனகரத்தினம்தான் அவன்.

### பல்லிலே இரும்புக்குண்டு

புஜ வலிமை காண்பிக்கப் பாரமான பொருட்களைத் தூக்கியபின் வாயிலே ஒரு பெரும் இரும்புக்குண்டைத் தூக்குகின்றான். சாதாரண மனிதர்களால் கையால் கூட அசைக்கமுடியாத அந்தக் குண்டு அவன் பல்விளிம்பிலே ஊஞ்சலாடுகிறது இருவர் குண்டின் மேல் சுத்தியலால் அடிக்கின்றார்கள். அற்புதமான நிகழ்ச்சி

### தலைகீழ் பாரம் தூக்கல்

முதலில் திரு. கனகரத்தினத்தின் சீடன் திரு. ராஜேஸ்வரன் வளையம் ஒன்றில் கால்களைக் கொழுவிக் கொண்டு தலைகீழாக நின்று பாரவளையத்தைப் பாங்காகத் தூக்குகின்றார். அவரை அடுத்து திரு கனகரத்தினம் வளையத்திலே கால்விரல் நுனியை மட்டும் கொழுவிக்கொண்டு( தலைகீழாகத் தூக்குகின்றார். ரசிகர்களின் கைதட்டல் விண் பிளக்கிறது.

### நெஞ்சிலே கல் உடைத்தல்

சாண்டோ கனகரத்தினத்தின் பரந்த மார்பிலே பாராங்கல் ஒன்றை வைக்கின்றார்கள். அவர் ஆடாதசையாது படுத்திருக்கின்றார். இருவர் இருபுறமும் நின்று சுத்தியலால் கணீர்கணீரென அடிக்கின்றார்கள். பாராங்கல் உடைகிறது. கல்லடிக்கும் உடையாத சாண்டோவின் மார்பைப் பெருமையுடன் பார்க்கிறார்கள் ரசிகர்கள். அவருடைய சீடன் திரு ராஜேஸ்வரன் பல்லாலே பாரம் தூக்குயவண்ணம் மேடையை வலம் வருகின்றார். ஆண்மையின் வலிமையை எடுத்துக்காட்டும் அற்புதமான காட்சிகள் இச்சாண்டோ விளையட்டுகள் பரிமளாஸ்ரோர்ஸாரின் ஆதரவில் காணிவலில் இடம் பெற்றது.

### கராட்டிக்காட்சி

ஆண்மையின் வலிமையைக் கண்டு ரசித்தவர்களுக்கு அடுத்த நிகழ்ச்சியாக ஆண்மையின் வீரத்தை விளக்கும் கராட்டிக்காட்சி ஆரம்பமாகியது. வடக்கின் கராட்டிமன்னன் கணேசலிங்கமும் அவரது சீடர்களும் கொழும்புக் கராட்டி வீரன் கிருபாகரன் ஆகியோரோடு உள்ளடக்கிய கொழும்பு வீரர்களும் இணைந்து இக்கராட்டிக் காட்சியை அளித்தனர். இக்கராட்டி நிகழ்ச்சியை மேடையேற்றிய பெருமை ஜவ்னு பெனின்சுலா கண்ணடித் தொழிற்சாலைத் தொழிலதிபரைச்சாரும்.

'காட்டா' என்னும் கராட்டிக் கைவரிசையுடன் கராட்டி விளையாட்டு ஆரம்பமாகியது.

ஆபத்து வரும் வேளையில் பாய்ந்து தடுக்கும் வழிகளை கராட்டிவீரர் இருவர் தெளிவுபடுத்தினர்.

### கத்திவீச்சு

பளபளக்கும் கத்திஒன்றைத் திடீரென மற்றவனை நோக்கி வீசினான் ஒருவன். 'நைசாக' அக்கத்திப் பாய்ச்சலுக்குத் தப்பி அவனை மடக்கினான் மற்றவன்.

கோடரி கொண்டு தாக்க வரும் எதிரியை எப்படிமடக்குவது என்று அப்பட்டமான கராட்டி விளையாட்டு மூலம் காண்பித்தார்கள் இருவர்.

### துப்பாக்கித்தடுப்பு

கராட்டிமன்னன் கணேசலிங்கம் துப்பாக்கியால் சுடவருகையில் எப்படித்தடுக்கலாமென அடுத்ததாகக் காண்பித்தார். மயிர்க்கூச்செறியும் காட்சியாக இக்கராட்டி விளையாட்டு அமைந்தது.

### கிருபாகரனின் சாதனை

ஆறு வீரர்கள் குனிந்தபடி இருக்க அவர்கள் ஆறு பேருக்கும் மேலால் ஒரே பாய்ச்சலில் தாவி அவர்களுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த ஓடுகள் அடங்கிய தொகுதியை ஒரு அடியில் தூள் தூளாக்கினார் கொழும்பு வீரர் திரு. கிருபாகரன்.

கராட்டி வீரன் திரு.முத்துக்குமாருவின் சவுக்குவீச்சு அபாரம் 'சுரீர் சுரீரென' வீசியது மட்டுமல்லாமல் ஒவ்வொரு முறையும் வீசியகையுடனேயே அதனை ஓய்வில் நிறுத்தியும் காண்பித்தார்.

### செங்கட்டி உடைப்பு

இறுதியாக ஐந்து செங்கற் தொகுதியை ஒரே அடியில் உடைத்ததன் மூலம் சாதனை ஒன்றைக் காண்பித்தார் திரு. கணேசலிங்கம்.

— பற்றிமாகரன்

## யோகாசனப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

அமெரிக்காவில் தங்கியிருக்கும் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தாவின் பிறந்த தினத்தையொட்டி நல்லை திவ்ய ஜீவன சங்கத்தில் நேற்று நடைபெறவிருந்த யோகாசனப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியை, நல்லை ஞானசம்பந்த ஆதீன யோகக் கலை ஆசான் ஸ்ரீ சித்தானந்தயோகி நடாத்தவிருந்தார். தற்போது திவ்யஜீவன சங்க மண்டபத்தில் குருபூர்ணிமாதின விழாவும் இசை விழாவும் நடைபெறுவதால், இப்போட்டியை சுவாமி சச்சிதானந்த யோகியின் பிறந்த தினமான புரட்டாதி 8ந் திகதி நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

[கெ]

பதவியிலிருந்து விலகுமுன்

# தஸ்தாவேஜுகளை தீயிட்டு அழிக்கவில்லை!

## குற்றச்சாட்டுக்கள் 'அபாண்டம்' என்கிறார் இந்திரா

புதுடில்லி, ஆக. 7

தாம் பதவிதுறக்கு முன் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில்வைத்து சில முக்கிய தஸ்த வேஜுகளைத் தீயிலிடவில்லை என்று முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்துள்ளார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பாக திருமதி காந்தி பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார்.

எந்த ஒரு தஸ்தாவேஜையும் தாம் எரிக்கவில்லை என்றும் தம் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உத்தியோக பூர்வ தஸ்தாவேஜுக்களை எதையும் தாம் வைத்திருக்கவில்லை என்றும் இக்கடிதத்தில் திருமதி காந்தி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

### கட்சி நடவடிக்கையில் ஈடுபாடு

இது இவ்வாறிருக்க திருமதி காந்தி கட்சி நடவடிக்கைகளில் மீண்டும் தீவிர ஈடுபாடு காட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்தரெட்டி, முன்னாள் மத்திய அமைச்சர்கள் திருவாளர்கள் வை. பி. சவான் சி. சுப்பிரமணியம் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதுடன் கட்சியின் செயற்குழு நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டி வருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)





வேலர்: என்ன வேலர்... மாவிலை குறைஞ்சு போச்சு... வீட்டிலை பலகாரம் சுடவில்லையோ.

மயிலர்: பலகாரம் சுடுவதற்கு மாவிலை மட்டும் குறைஞ்சால் போதாது மாப்பிளை விலையும் குறைய வேணும்.

— சுந்தர்

## ஆசிய ஸ்தாபனத்திற்கு ஜாப், ஆஸி, நியூஸிலாந்து உதவும்

கோலாலம்பூர், ஆக. 7

ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் 'ஏசியன்' ஸ்தாபனத்துக்கு உதவியளிக்க முன்வந்துள்ளன.

மேற்படி ஸ்தாபனத்தின் மாநாடு தற்போது கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. பரஸ்பர கஷ்டங்கள் குறித்து குறிப்பிட்ட நாடுகள் இந்த ஸ்தாபனத்துடன் கலந்தாலோசித்ததாக அறிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு நல்ல பலனளிக்கும் என்று மலேஷியப்பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆசியாவின் உற்பத்தித் துறை உட்பட உற்பத்திப் பொருட்களுக்குத் தற்போதுள்ள வர்த்தகத் தடை நீக்கப்படவேண்டுமென்றும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் 9 பிரதான கைத்தொழில் முயற்சிகளுக்கு ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் உதவுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஜனாதிபதி தமிழ்நாட்டில் மூன்று நாள் விஜயம்

சென்னை, ஆக. 7

பாரதஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டி இம்மாதம் 18-ம் திகதி தமிழ்நாடு சட்டசபையில் கர்மவீரர் காமராஜரின் உருவப்படத்தைத் திறந்து வைக்கவிருக்கிறார்.

இம்மாதம் 17ம் திகதிகாலை விசேட விமானத்தில் சென்னை வரும் ஜனாதிபதி விமான நிலையத்தில் 45 நிமிடங்கள் தங்கிவிட்டு திருப்பதி செல்வார்.

சட்டசபையில் 18ம் திகதி காமராஜர் உருவப் படத்தைத் திறந்துவைப்பதுடன் ராஜ்பவனில் மகாத்மாகாந்தியின் உருவப்படத்தையும் அவர் திறந்து வைப்பார்.

19-ம் திகதி அவர் புதுடில்லி திரும்புவார். ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின் ஜனாதிபதி தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்வது இதவே முதல்தடவைஎன்பது குறிப்பிடத்தக்கது. (உ)

சாலிஸ்பரியில்

# பயங்கர குண்டு வெடிப்பு: 17பேர்மரணம் 76பேர்காயம்

லண்டன், ஆக. 7

சாலிஸ்பரியிலுள்ள அரசாங்க களஞ்சிய அறையில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 17 பேர் மரணமாகினர், 76பேர் காயமடைந்தனர்.

ரொடீஷியாவில் இடம்பெற்ற மிகமோசமான கொரிலாத் தாக்குதல் இதுவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்தோரிலும், காயமடைந்தோரிலும் பெரும்பாலானோர் கறுப்புஇனத்தவர்களே என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

## மாலைதீவில் பாகிஸ்தான் தூதரகம்

இஸ்லாமாபாத், ஆக. 7

பாகிஸ்தான் மாலைதீவில் தூதரகம் ஒன்றைத் திறந்துள்ளது.

இது மாலைதீவில் திறக்கப்பட்டுள்ள இரண்டாவது வெளிநாட்டுத் தூதரகமாகும்.

முதலாவது தூதரகத்தை பாரதம் இங்கு திறந்திருந்தது.

32 வெளிநாடுகள் மாலைதீவின் ராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. (உ)

## "மாணவரை திருப்திப்படுத்த எம்.ஜி.ஆரால்முடியவில்லை"

### கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

சென்னை, ஆகஸ்ட் 7

''தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனது டில்லிப் பேச்சு, மாநில அரசின் பிடியை மத்திய அரசின் பிடிக்குள் ஒப்படைக்கும் செயல்போன்றது' என்று திராவிடமுன்னேற்றக்கழக தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சென்னை 7ம் வட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'திரு. எம். ஜி ஆர். டில்லியில், மாணவர் போராட்டத்தை ஏதோ அரசியல் இயக்கம் நடாத்துகின்றது என முறையிட்டார். இவர் முதலமைச்சராக பதவியேற்றபின் அதுவும் குறுகிய காலத்தில் மாணவரைக்கூட திருப்திப்படுத்தவில்லை. இதனால் புதுடில்லிக்குப்போய், எந்த அரசியல் இயக்கம் மாணவர்களின் போராட்டத்தை நடாத்துகின்றதென பயத்தினால் பெயர் சொல்லமறுத்து இரந்துநிற்கிறார். இதனால் மாநிலத்தின் அதிகாரப் பிடியை மத்திய அரசின் பிடிக்குள் திணிக்கமுயல்கிறரா' எனக் கேட்டார். (கெ-உ)

### 'அமைச்சர்களே பதிலளிக்கவேண்டும்'

சென்னை, ஆகஸ்ட் 7

'எந்தப் பிரச்னைமீது எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்கின்றனரோ, சம்பந்தப்பட்ட துறையில் உள்ள அமைச்சர்களே பதிலளிக்கவேண்டும்'' என்று தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகர் திரு முனுஆதி அமைச்சர்களுக்கு கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எழுப்பிய ஒழுங்குப் பிரசனையின்போதே, சபாநாயகர், அமைச்சர்களுக்கு மேற்படி கோரிக்கை விடுத்தார்.

அவர் தமது கோரிக்கையில் 'எதிர்க்கட்சியினர் தார்மீகமான முறையில் அமைச்சு சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்டால், வேறு பிரச்னைகளை எழுப்பாமல் சம்பந்தப்பட்ட அமைச்சரே பதிலளிப்பது ஜனநாயகமுறையாகும்' என்றார் (கெ-உ)

## இறக்குமதி

புதுடில்லி ஆக 7

பாரதம் இலங்கையிடமிருந்து பெருமளவில் ஏலக்காய், கராம்பு ஆகியவற்றை இறக்குமதிசெய்யவுள்ளது. (உ)

## தனிநாடு திருத்தப் பிரேரணை

கொழும்பு, ஞாயிறு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான திருத்தப் பிரேரணை தேசிய அரசுப் பேரவை லிகிதரிடம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தினால் ஒப்படைக்கப்பட்டது.

'தனி நாடு' ஒன்றை தமிழ்மக்களுக்காக நிறுவவேண்டும் என்று திருத்தப் பிரேரணையே தமிழர் விடுதலைக் கூட்டணியினால் லிகிதரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ)

## சஞ்சய் காந்தியின் மனு: நீதிமன்றம் நிராகரித்தது

புதுடில்லி, ஆக. 7

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய்காந்தி தம்மை நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகாமல் இருப்பதற்காகச் செய்துகொண்ட மனுவை டில்லி மெட்ர பொலிட்டன் நீதிபதி நிராகரித்துள்ளார்.

அரசியல்வாதிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட ஹிந்தி படச்சுருள்களை அழித்தது தொடர்பாக சஞ்சய் காந்திக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கிலேயே காந்தியின் மனு நிராகரிக்கப்பட்டது. (இ)

## பன்ஸிலால் வீட்டில் 4லட்சம் பதுக்கல் பொருட்கள்

புதுடில்லி, ஆக. 7

இந்தியமுன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலால் வீட்டிலிருந்து 4 லட்சம்ரூபா பெறுமதியான பதுக்கல் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹரியானா பொலிசார் இவரது வீட்டில் நடத்திய சோதனையில் இறக்குமதிசெய்யப்பட்ட ஜவுளிகள் நகைப்பெட்டிகள் பெட்டகங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

பொலிசாரின் சோதனை இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன.

முன்னரும் பன்சிலாலின் உறவினர் ஒருவரின் வீட்டில் அவருக்குச்சொந்தமானதெனக் கருதப்படும் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

## ராஜினமா

தெஹ்ரான், ஆக. 7

ஈரானிய பிரதமர் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். (உ)

## வன்செயல்: விசாரணைக் குழு

கொழும்பு, ஞாயிறு

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற வன்செயல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு அரசாங்கம் ஐவர் கொண்ட குழு ஒன்றை நியமிக்கவிருக்கிறது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. சிறிவர்த்தனவை தலைவராகக் கொண்ட இக்

[6-ம் பக்கம் பார்க்க[

அரசின் கொள்கை விளக்கம்:

# கமக்காரர் யாவருக்கும் காணி சொந்தமாகும்

(முன்தொடர்ச்சி)

## காணிச்சீர்திருத்தம்

காணி உச்ச வரம்பினுள்- இதில் மாற்றஞ் செய்யப்பட மாட்டாது-சொந்தக்காரர்கள் தமது உடைமைகளை தம் இஷ்டப்படி விற்கவும், அக்காணிகளைமுகாமைசெய்யவும், பயன்படுத்தவும் வழிசெய்யப்படும். அரசியற் தலையீடு காரணமாக அல்லது மேற்குறிப்பிட்ட சட்டங்களை அநீதியானமுறையில் செயற்படுத்தியமை காரணமாக எவையேனும் அநீதிகள் இழைக்கப்பட்டிருப்பின், அவற்றுக்குப் பரிகாரம் அளிக்கப்படும். அரசுக்கு உரித்தாக்கப்பட்ட காணிகளின் முகாமையில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுவதுடன், அவற்றின் முகாமையிலும், பயன்களிலும் மக்கள் பங்கெடுக்ஜக்கூடியதாகவிருக்கும்.

கமநிலச் சீர்திருத்தமானது தொடருகின்ற ஒரு பிரச்னையாகுமென அரசாங்கம் கருதுவதுடன், பின்வரும் நான்கு குறிக்கோள்களை எய்தும் பொருட்டு புதிய வழிவகைகளைச் செயற்படுத்தவும் முனையும்.

(அ) காணியற்றோருக்குக் காணி கொடுத்தல்;

(ஆ) கமக்காரர்கள் யாவருக்கும் காணி சொந்தமாக்கல்:

(இ) மக்களுக்கு அதியுச்ச பயனை அளித்தல்;

(ஈ) உணவில் நாடு தன்னிறைவு அடையச்செய்தல்.

## மீன்பிடித்தொழில்

எமக்குத் தேவையானமீனைப் பெறுவதில் இலங்கை தன்னிறைவு காண்பதற்கு அவசியமான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

மீன்பிடித்தொழிலுக்குஆக்கபூர்வமான உதவியைவழங்குவதற்குத் தேவையான அடிப்படையை ஏற்படுத்தவதில் அரசு முக்கிய பங்கெடுக்கும். இது தொடர்பில், அது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

(அ) துறைமுகச் சேவைகளையும், நங்கூரமிடுதற் சேவைகளையும், பழுதுபார்த்தற் சேவைகளையும் வழங்குதல்; ஆராய்ச்சி வசதிகளும், பயிற்சி வசதிகளும்; வீடமைப்பு, நலனோம்பு வசதிகள்; கடன்வசதிகள்; நாடெங்கணும் குளிரூட்டப்பெற்ற அறைகள் என்பவற்றை அமைத்தல்.

(ஆ) நியாயமான விலைகளில் படகுகள், யந்திரங்கள், உதிரிப்பாகங்கள், வலைகள், மீன்பிடிச் சாதனங்கள் என்பவற்றை வழங்குதல்.

(இ) பாரம்பரியமான மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் குடும்பத்தினரிலிருந்து தெரிவுசெய்யப்படும் கடலோரப் பாதுகாப்புச் சேவை ஒன்றைத் தாபித்து, அதன்மூலம் உயிர்மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வழிவகுத்தல்.

(ஈ) மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார்கட்கும் கூட்டுறவுச் சங்கங்கட்கும் உத்தரவாதவிலைகளையும், சந்தைப்படுத்துதல் வசதிகளையும் வழங்குதல்.

(உ) மீன்பிடித் தொழில் அற்ற காலங்களில் வேறுவேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஊ) டைனமற் வெடி வைத்து மீன்பிடித்தல், இலங்கையின் மீன்பிடி வலயத்துள் வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் பிரவேசித்தல் என்பவற்றைத் தடைசெய்வதன்மூலம், மீன்பிடி வளங்களைப் பேணுதல்.

உள்நாட்டு நீர்வளங்களில் மீன்வளர்ப்பையும். நன்னீர் மீன்வளர்ப்பையும் அரசு ஊக்குவிக்கும்.

பின்வருவன தொடர்பிலும், எனதுஅரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்:-

(அ) ஆழ்கடல் - இழுகப்பல் (ரோலர்) மீன்பிடிப்புக் கைத்தொழிலை நிறுவுதல்.

(ஆ) மீன், கடல் உணவு வகைகள், மற்றும் உப உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்தல்.

## கல்விமுறைகள்

மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதன்பொருட்டும், படகு அமைத்தற் கைத்தொழில் ஒன்றைத்தாபித்தற் பொருட்டும், ஏற்கனவே உள்ள படகுகளை இயந்திரமயமாக்குதற் பொருட்டும், மீன்பிடிச்சாதனங்களை உற்பத்தி செய்தற் பொருட்டும், இன்னோரன்னவற்றுக்குமாக, தனியார்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவிகளும் ஊக்கமும் அளிக்கப்படும்.

பொதுமக்களுக்கு ஒருவிதமும், அதிகாரத்தில் இருந்து வந்தவர்களின் இனபந்துக்களுக்கு இன்னொரு விதமுமான இருவகைக் கல்விமுறைகள் இருந்துவந்துள்ளன. அரசாங்கமானது, இத்தகைய பாகுபாட்டை நீக்குவதுடன், பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

1. பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெறுதல். அவர்களின் பிள்ளைகளது கல்வி தொடர்பில் பெற்றோர்களால் ஆசிரியர்களின் ஒத்தாசையுடன் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளைக் குறித்துரைக்கும் பெற்றோர் பட்டயமொன்று தயாரிக்கப்படும்;

2. கல்வித் தராதரங்களை முன்னேற்றுதல், இதன்மூலம் தனிநபரின் ஆளுமை விருத்தி செய்யப்படுகிறது;

3. வருங்காலத்துப் பிரஜைகளைப் பயிற்றுவதில் ஆசிரியத் தொழில் வகிக்கும் முக்கியத்துவத்திற்கு மதிப்புக்கொடுத்தல். கல்விச்சேவை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும்;

4. தற்போது பிரபல பட்டினப் பாடசாலைகளில்மாத்திரம் கிடைக்கப்பெறும்வசதிகளான போதிய அளவு ஆசிரியர்கள், ஆய்வுகூடங்கள், வசதி நிறைந்த, நெருக்கடியற்றவகுப்பறைகள் போன்ற வசதிகளை கிராமியப் பாடசாலைகளுக்கும் விஸ்தரித்தல், இவ்வாறாக இக்கிராமியப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களும் வைத்தியம். பொறியியல், தொழில் நுட்பம், கணக்கியல், சட்டம் போன்ற உயர்தொழிற் கல்வித்துறைகளில் பயின்று, ஏனைய மாணவர்களுடன் இத்துறைகளில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறுவர்.

(5) பாடசாலைப் பண்ணைகள் அமைத்தல் மூலம் விவசாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்பற்றிய பிரயோகமுறை அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுதலை ஊக்குவித்தல். இப்பண்ணைகளிலிருந்து ஈட்டப்பெறும் இலாபமானது, பாடசாலைகள், ஆசிரியர்கள். மாணவர்கள் ஆகியோர் மத்தியில் பகிர்ந்துகொள்ளப்படும்.

(6) தோட்டத் தொழிற்றுறை, விவசாயத்தொழிற்றுறை, மீன்பிடித் தொழிற்றுறை என்பவற்றுக்காக விசேட நிறுவனங்களை நிறுவுவதற்கு உடன் நடவடிக்கை எடுத்தல். மேற்படி துறைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமையும் ஒவ்வொரு மாவட்டத்திலும், பாடசாலையிலிருந்து விலகிச்செல்வோர்சேர்ந்து பயில உதவும் வகையில் அத்தகைய நிறுவனங்களை நாம் தாபிப்போம்.

(7) தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்கள் குறைந்த தகுதிகளை மாத்திரம் உடையோர் ஆகிய பலரும் பயிற்சி பெற்று மேலும்சிறந்ததொழில்களுக்குத் தம்மைத் தயார் செய்துகொள்ளும்பொருட்டு, இரவுப்பாடசாலைகள், வளர்ந்தோர் கல்விப் பாடசாலைகள், தொழில்முறைப் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் அவர்களுக்குச் சந்தர்ப்பங்களையும் வசதிகளையும் அளித்தல்.

(8) ஒரு பல்கலைக்கழகம்என்னும் அமைப்பிற்குப் பதிலாக தனித்துவமும், தன்னுதிக்கமும் வாய்ந்த பல பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழகக் கல்விமுறையை மீள ஒழுங்கமைத்தல்.

(9) தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களின் நிமித்தம் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரமுடியாதிருப்போரின் நன்மை கருதித் திறந்த பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்.

(10) விடுமுறைக் காலங்களின்போது மாணவர்கள் பகுதி நேர வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள உதவும் வகையில் திட்டமொன்றைத் தயாரித்தல்.

## கல்வி முறையில் மாற்றம்

உலகின் அபிவிருத்திப் போக்கிலிருந்து எமது நாட்டு மக்களானோர் இனிமேல் எக்கணமும் வேறுபட்டுப் புறம்பாக இருத்தலாகாது என்பதை எனது அரசாங்கம் உறுதிசெய்யும். விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலைகள் போன்ற துறைகளில் நாடுகள் கண்டுள்ள முன்னேற்றத்தின் பயனை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான எல்லாச் சந்தர்ப்பங்களையும் அவர்கள் பெறுதல்வேண்டும். இச்சந்தர்ப்பமானது சிறப்புரிமை பெற்ற ஒரு சிலருக்கே தற்போது கிடைக்கப்பெறுவதாக உள்ளது. எமது பாடசாலைகளில் ஆங்கிலமும் ஏனைய சருவதேச மொழிகளும் போதுமானதொரு தரத்திற்குப் போதிக்கப்படுதல்வேண்டுமென ஏற்பாடு செய்தவன் மூலமும், வளர்ந்தோர் கல்வி வாயிலாகப் பயன்பெற விழையும் யாருக்கும் அத்தகைய வசதிகள் கிடைக்க வழிவகை செய்வதன் மூலமும் இந்நிலைமையை எனது அரசாங்கம் மாற்றியமைக்கும்.

## மூளைசாலிகள் விரக்தியுணர்வு

நாட்டின் மூளைசாலிகளும், மிகவும் பயிற்றப்பட்டோரும் தகைமை பெற்றோருமான பலர், அவர்களின் சேவைகள் எமது நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமாகத்

(6-ம் பக்கம் பார்க்க)


உ

முருகன் துணை

தெல்லியூர் வித்துவசிரோமணி

பூ. பொன்னம்பலப்பிள்ளையின்

## மாவை யமக அந்தாதி

(பேராசிரியர் வித்துவான்
ஒளவை சு. துரைசுவாமிப்பிள்ளையின் உரையுடன்)

## வெளியீட்டு விழா

காலம்: 16-8-77 செவ்வாய்க்கிழமை
மாலை 6-30 மணி.

இடம்: மாவை முருகன் சந்நிதானம்

தலைமை உரை:

பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள்
M. A. Ph. D (இந்து கலாச்சார பீடம், யாழ் வளாகம்)

ஆசியுரை:

'சிவாகம வித்தியாபூஷணம்'
பிரம்மஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா

நூல் வெளியீட்டுரை:

உயர்திரு 'நாவலர்' அ. அமிர்தலிங்கம் B.A.
எதிர்க்கட்சித் தலைவர், தேசிய அரசுப் பேரவை

முதற் பிரதி பெறுநர்:

'சிவதரும வள்ளல்' திரு. க.கனகராசா ஜே.பி

ஆய்வுரைகள்:

கலாநிதி திரு. அ. சண்முகதாஸ் M.A.,Ph.D.
(தமிழ்த்துறை-யாழ் வளாகம்)

பண்டிதர் இ. நமசிவாயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூல் வெளியீட்டுக்குழு
எஸ்பிஹெம் நிறுவனம்

மாவை ஆதீனம்
4-8-77

6792



## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/83

தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி,
1. கனகநாயகம் கைம்பெண் அருந்ததிநாயகம்
2. கணநாதன்

வாதிகள்

எதிராக

தெல்லிப்பழை மாவிட்டபுரம்
1, சீனிவாசகம் அப்புத்துரையும்
2. பெண் அன்னம்மாவும்

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு காணிகள் 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ம் திகதி (1977-9-14) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 4575/-வும் மேலும் ரூபா 3000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது (9%) வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974-ம் ஆண்டு பங்குனி மாதம் 3-ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1974-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25-ந்திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 528-90 கொடுக்கவேண்டும். இத்தீர்வையின் பேரால் எதிராளிகள் வழக்காளிகளுக்கு ரூபா 1000/- கொடுக்கப்பட்டது.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவில் பற்று மாவிட்டபுரமிறை.

1. நல்லான் சீமா நிலப்பரப்பு பத்தேகாலும் (நி.ப. 10 1/4) பனைகளும் எல்லைகிழக்கு தம்பிப்பிள்ளை செல்லையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும். வடக்கு ஒழுங்கை மேற்கு பரமு கைம்பெண் பொன்னுவினுதனமும், தெற்கு வல்லிபுரம் பெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதில் சொரியலாய் நாலிலொரு பங்குமதற்குரியவைகளும்,

2. மயிலிட்டிக் கோவில்பற்று தையிட்டி இறை உத்தியாவத்தை நிலப்பரப்பு பதினறு (நி ப. 16) இதில் தெற்குப் பக்கமாக நிலப்பரப்பு எட்டு (நி. ப. 8) எல்லை கிழக்கு சின்னத்தம்பி கதிரவேலுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சீனிவாசகம் பொன்னம்பலத்திற்கு இதில் கழித்து விடப்பட்ட மிகுதி ஆதனம் மேற்கு குளம் தெற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்கும் பிள்ளைக்குமுரிய ஆதனமும் கந்தையாபெண் அன்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலுமின்னும் வடக்குக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
25-7-77.

6781

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 3-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL (JAFFNA) Daily: at 4-45, 7-00 & 9-30 p.m.
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color

ராணி (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம் 95-வது நாள்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா ('இருவேடங்கள்') நடித்த
நாளை நமதே
15ம் திகதி முதல் சிவாஜி-கே. ஆர். விஜயா
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா நடித்த
வைர நெஞ்சம்
நாளை முதல் ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு - வெள்ளைப் பிரதி)
19-ந் திகதி முதல்
சிவகுமார் சுஜாதா
அன்னக்கிளி


நல்லூர் கிராமசபை

## கேள்வி விளம்பர அறிவித்தல்

நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் 1977ம் ஆண்டு ஆவணி மாதம், 25ம் திகதி, வியாழக் கிழமை காலை 10-00 மணி வரை கீழ்க்காட்டிய வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 10/- டென்டர்ப் பணமாகவும் கட்டியதன்பெயரிலே வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நல்லூர் கிராமசபையில் 1977ம் ஆண்டு, ஆவணி மாதம், 23ம் திகதி, செவ்வாய்க்கிழமை மாலை 2-00 மணிவரை வழங்கப்படும். இது சம்பந்தமான மற்றைய விடயங்களை நல்லூர் கிராமசபை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம். டென்டர் பத்திர பிரதிகளில் ஒன்று பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

(1) கொண்டலடி - புதிய செங்குந்தா வீதி.

ஒப்பம்
தி. நாகேஸ்வரன்
விசேட ஆணையாளர்
நல்லூர்,
கிராமாட்சி மன்றம்

6793


புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வளர்பிறை

வெலிங்டன்
வெல்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சந்திரகாந்தா
கலைக்கோயில்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கண்ணப்பா - அஞ்சலிதேவி
டவுண் பஸ்


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அளவெட்டி தெற்கில், மல்லாகம் - சங்கானை றோட்டில், சகல தளபாடங்களுடன் நவீன வசதிகள் உள்ள வீடும், வளவும் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. சாந்தா இரத்தின ஜெயா, 'மலர் இல்லம்', அளவெட்டி. 6766

## தேவை

வார்ப்பு வேலை, லேத்வேலை கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும்! ராதாமெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6755

மோட்டோஸ், பாட்ஸ் கடைக்கு, பழைய, புதிய அலுமாரிகள் தேவை. 10-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில்.- S. யோகருபா, 49/4, றபில் றோட், சிறும்பியடி. 6790

விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பாடங்கள் அனைத்திற்கும் பாடங்களைப் போதிக்க ஆசிரியர்கள் உடனடியாக தேவை. 12-8-77க்கு முன்னர் நியமிக்கப்படுவார்கள். தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், கலைவாணி கல்வி நிலையம், கிளிநொச்சி. 6795

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், மாமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

பாண் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர் உடனடியாகத் தேவை. விபரங்கட்கு: இலட்சுமி பேக்கரி, அச்சுவேலி. 6800

## இனாம்

சென். பற்றிக்ஸ் விளையாட்டு விழா மைதானத்தின் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் விற்பனையாகிறது சோயாற்றின் ஒரு பைக்கட் சோயாற்றின் வாங்கி— 1 (B) பாய்க்கையும், 1 படத்தையும் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். 6762

## இனாம்

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் யாழ். றெட்றிக் விளையாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச் சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த பரிசுப் பொருட்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6761

## யாழ். மா. ப. நோ. கூ. சங்கம்

எமது சங்கத்தின் மின் தறி உற்பத்தியாகிய கிறே பப்பிளின் (Gray poplin) கேள்வி மூலம் விற்பனைக்கிருக்கிறது. விண்ணப்பங்கள் யாவும் 10-8-77 புதன்கிழமை பி. ப. 5 மணிக்குப் பிந்தாமல் சங்கக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கிறே பப்பிளின் கேள்வி விண்ணப்பம்'' என எழுதப்பட்டு அனுப்பப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கம்.
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 6801

## நாய்கள் தொல்லை

மன்னார், ஞாயிறு

மன்னார்ப்பட்டினத்தில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. பட்டின மத்தியிலும், கடைவீதிகளிலும் ஏராளமான நாய்கள் திரிவதால் மக்கள்மிகவும் பீதியுடன் நடமாடவேண்டியுள்ளது.

இங்கு நாய்க்கடியினால் ஏற்பட்ட ஏற்புவலியால் ஒருவர் மரணமானதும் கடைவீதிப் பாதுகாப்பு ஊழியர் வி. பிரான்சிஸ் என்பவர் நாய்க்கடியினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மன்னார், ஞாயிறு

மன்னாரிலிருந்து பாப்பரசரைத் தரிசிக்க இலங்கையின் தூதுக்குழுவின் சார்பாகச் சென்றவரும் மன்னார் மரியாயின் சேனை தலைவருமான திரு. கே. எஸ். பெனடிக்ற் மன்னார் ஆஸ்பத்திரி நோயாளர்களைப் பார்வையிட்டு பாப்பரசரின் ஆசீர்வாதம் வழங்கினார்.

(அ.


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாசன், தேவிகா,
ஜெயசித்ரா,
எஸ். வி. சுப்பையா
நடித்த
சத்யம்
டைரக்ஷன்: S. A. கண்ணன்
[ஈஸ்மன் கலர்]
[திரைக்கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்]

கடைசிவாரம்
ராஜா (யாழ்நகர்)
90-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ALAIN DELON
in
THE ADVENTURERS

சாந்தி யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஓ என். டி. ராமராவ் - ஓ சௌகார்ஜானகி
ராஜசேவை
(பயங்கர வாள் சண்டைகள் நிறைந்த படம்)

ஈழநாடு
The EELANADU

## கமக்காரர் யாவருக்கும்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்பட்டிருந்த போதிலுங் கூட, எமது நாட்டை விட்டு வெளிநாடுகளில் சேவை புரியச் செல்வதற்குக் காரணமாக இருந்த விரக்தியுணர்வைப் போக்குவதற்கு எனது அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அத்தகையோரின் தொழில் முன்னேற்றம், வேலை நிலைமைகளில் திருப்தியுணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலமும், இவற்றுக்கு ஏற்றதான சூழலை ஏற்படுத்துவதன் மூலமும், மேற்குறிப்பிட்ட பிரச்னையைத் தீர்க்க எனது அரசாங்கம் முனையும். மேலும், மனவருத்தத்தை அளிக்கும் ஒரு பிரச்னையான ''மூளைசாலிகள் வெளியேற்றப்'' பிரச்னையை வருங்காலத்தில் அகற்றுவதற்கு மாத்திரமன்றி, ஏற்கனவே, எமது நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளோரை இந்நாட்டுக்கு ஈர்ப்பதற்காகவும் எனது அரசாங்கம் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்நாட்டில் கிடைக்கப் பெறுவதான அதிசிறந்த உயர் தொழிற் சேவைகளையும், தொழில்நுட்பச் சேவைகளையும் பெறுவதற்கு எமது நாட்டு மக்கள் உரித்துடையர் என எனது அரசாங்கம் கருதுகிறது. இதற்கமைய, மக்களுக்கு அத்தகைய சேவைகள் கட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி செய்வதன்பொருட்டு, அரசாங்க சேவையிலும், அதற்கு வெளியிலும் உள்ள உயர் தொழில், தொழில்நுட்ப ஆளணியினருடன் கலந்தாலோசித்து உசிதமான திட்டங்களை ஆக்குவதற்கு எனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

### வேலையில்லாப் பிரச்னை

வேலையில்லாப் பிரச்னையும், கீழ்உழைப்பு நிலையையும் அகற்றுதலை எனது அரசாங்கமானது மிக முதன்மை வாய்ந்த ஒரு விடயமாகவும், தேசிய முக்கியத்துவம் பெறும் ஒரு பிரச்னையாகவும் கணிக்கின்றது. இக்குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு, எனது அரசாங்கமானது, ஆக்க பூர்வமான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் மூலம், மனித வாற்றலின் அதியுயர் பயனைப் பெறுவதையும், எமது இளைஞர்களின் ஆற்றல்களுக்கேற்ற பணி வழங்கப்படுதலையும், அவர்கள் அரசாங்க வேலைகளில் மாத்திரம் தங்கியிராதிருத்தலையும் உறுதி செய்வதற்கு மிகுந்த முயற்சிகளைமேற்கொள்ளும். தொழில்களுக்கு ஆட்சேர்த்தலானது திறமையின் அடிப்படையில்

### பொருளாதார அபிவிருத்தி

கல்வியுற்ற, பயிற்றப்படாத வேலையற்ற தொழிலாளர்களை மாவட்ட மட்டத்தில் வேலையில் சேர்த்துக்கொள்வதன் பொருட்டுக் கைத்தொழில் நிலையங்கள் தாபிக்கப்படும். உள்ளூர் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் சுயமாகத் தொழில் புரிய விழைவோருக்குக் கடன் வசதிகள் அளிக்கப்படும். அரசாங்கமானது நாட்டின் வங்கி அமைப்பு முறையின் ஒத்துழைப்புடன் இத்தகைய முயற்சிகளுக்குத் தேவையான சந்தர்ப்பம் வசதிகள் தகுதியான இடம் போன்றவற்றை நல்கும்.

மரபு முறையல்லா உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்காகக் கூட்டுறவுப் பண்ணைகள் தாபிக்கப்படும். பண்ணையின் உற்பத்திப் பொருட்களைச் சேகரிப்பதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் விநியோகிப்பதற்குமென கூட்டுறவு வர்த்தக நிலையங்கள் தாபிக்கப்படும்.

மகாவலித் திட்டம், வீதிகள், கட்டடங்கள், பாலங்கள் போன்றவற்றின் நிர்மாணம் போன்ற பாரிய அரச அபிவிருத்திப் பணிகளைப் பொறுப்பேற்பதற்கு, கைவிடப்பட்ட காணிப்படையை ஒத்தவையான தேசிய அபிவிருத்திக் கூறு ஒன்று ஆண் பெண் இருபாலருக்குமென நிறுவப்படும்.

கொள்கை வகுத்தல், அதன் செயற்பாடு என்பவற்றிலும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் ஒழுங்கமைப்பு சுய நிருவாகம் என்பவற்றிலும் அவர்கள் ஒரு பாகமாக அமைந்திருக்கும் புதியதொரு சமுதாயத்தில் தனியான கூட்டான முன்னேற்றங் காணுதலிலும் இளைஞர்க்குப் பூரண சந்தர்ப்பத்தை நிறுவன ரீதியாகவும் ஏனைய வழிவகைகள் மூலமும் எனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இக்குறிக்கோளை எய்துதற் பொருட்டுப் பின்வருவனவற்றை நிறைவேற்ற எனது அரசாங்கம் உத்தேசிக்கின்றது:

(அ) பின்வருவன நோக்கங்களுக்காக, குறித்த வொரு காலப்பகுதிக்கு தேசிய அபிவிருத்திச் சேவையில் பணிபுரிவதற்காக இளைஞர்களை ஆட்சேர்ப்பதன் பொருட்டு இலங்கை இளைஞர் இயக்கமொன்றைத் தாபித்தல்;—

(i) தேசிய நிர்மாணமெடுத்த பணியில் பயிற்சி;

(ii) தேசியப் பற்றுணர்வை ஊட்டுதலும், சகபிரசைகளின் நலன்குறித்து அக்கறை செலுத்துதலும்;

(iii) தனித்தனி இளைஞர்கள் மட்டு இயல்பு வழிய மைந்த பண்புகளான, தலைமை தாங்குமாற்றல், புதியன அறிதல் ஆற்றல் மற்றும் இவை போன்றவற்றை விருத்தி செய்தல்;

(iv) தொழில் மாண்பினை நிலைநிறுத்துவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தல்;

(ஆ) மக்கள் சபைகளின் உறுப்பாண்மையில் இளைஞர்களுன் பிரதி நிதிகளைத் தேர்தல்மூலம் சேர்த்துக் கொள்ளுதல்;

(இ) இளைஞர்களும், இளைஞர்களின் நலனோம்பலும் என்னும் விடங்களுக்குப் பொறுப்பான அமைச்சு ஒன்றை உருவாக்குதல்.

கொள்கை திருணயித்தலும் செயற்படுத்தலிலும் நேரடிப் பிரதிநிதித்துவத் வகித்தலின் வாயிலாக, இந்நாட்டின் அபிவிருத்தியிற் பங்குபற்றுதற்கு இளைஞர்களுக்கு இப்பிரேரணைகள் உத்தரவாதம் அளிக்கின்றன. இவ்வாறாக அரசாங்கத்தின்மீது அவர்களுக்கு மீளவும் நம்பிக்கை உண்டாகும். காரணம், அவர்கள் உறுப்பினர்களாக வாழவிருக்கும் எதிர்கால சமுதாயத்தை அவர்களே உருவாக்குவார்கள்.

(தொடரும்)

## ''மீண்டும் மரவரிமுறை வதந்தி பொய்யானது''

யாழ்ப்பாணம், திங்கள்

''வடபகுதியில் வெற்றிகரமாக இயங்கிவரும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் புதிய அரசாங்கத்தால் கலைக்கப்படலாமெனத் தொழிலாளர் மத்தியில் சிலர் பொய்யான செய்தியைப்பரப்பி வருவது வேதனைக்குரியது. அப்படியான நிலைமையைப் புதிய அரசாங்கம் ஏற்படுத்தாது எனத் திட்டவட்டமாக நம்பலாம்.''

இவ்வாறு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும், பனம் பொருள் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக சேவையாற்றியவருமான ஆசிரியர் திரு க. நடராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''முன்னைய காலங்களில் மரவரிமுறையில் தொழிலாளரைச் சுரண்டி வாழ்ந்த சில முதலாளித்துவாதிகள் நாட்டில் இப்படியான செய்தியைப் பரப்பிச் சிலர் தொழிலாளர்களிடையே ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இச்சங்கங்களை அரசாங்கம் மாற்றியமைப்பதற்கு எவ்வித காரணமுமில்லை. தேசிய அரசுப் பேரவையின் திறப்புவிழா வைபவத்தில் ஜனாதிபதியின் உரையில் உள்நாட்டுக் கைத்தொழில்களை அரசாங்கம் மேலும் மேலும் வளர்க்க ஆவன செய்யுமென்று உறுதியளித்துள்ளது. (கெ-அ)

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், திங்.

யாழ். திவ்யஜீவனசங்க மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் இசைவிழாவின் 9வது நாளான இவறு இளங்கலைஞர்களுக்குப் பரிசு வழங்கப்படும். விழாவிற்கு பன்னமூலை டாக்டர் என். சுப்பிரமணியம் தலைமைதாங்குவார். வரவேற்புரையை மீனாட்சி வர்த்தகக்கல்லூரி அதிபர் திரு. எஸ். சத்தியமூர்த்தி நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி கே. வி. நவரத்தினம் கலந்துகொள்வார். பரிசளிப்பு வைபவத்தில் இளங்கலைஞர் மன்றம் நடாத்திய 6வது இசைப்போட்டியில் வெற்றிபெற்ற இளங்கலைஞர்களுக்கு 12 தங்கப்பதக்கங்களையும், பல வெற்றிக்கிண்ணங்களையும், கேடயங்களையும், சான்றிதழ்களையும், திருமதி சத்தியபாலதேவி நவரத்தினம் வழங்குவார்,

(கெ-இ)

## சுவீப்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 07 A 0487 | 08 A 0642 |
| 01 A 0661 | 28 A 0201 |
| 31 A 0420 | 33 A 0392 |
| 34 A 0194 | 39 A 0039 |
| 43 A 0596 | 04 B 0070 |
| 46 B 0987 | 18 C 0015 |
| 28 C 0323 | 46 C 0578 |
| 08 D 0141 | 11 D 0505 |
| 17 D 0468 | 25 D 0271 |
| 37 D 0812 | 41 D 0405 |
| 52 D 0297 | 03 E 0713 |
| 07 E 0616 | 19 E 0608 |
| 52 E 0860 | 03 F 0993 |
| 09 F 0306 | 44 F 0385 |
| 46 F 0600 | 04 G 0847 |
| 11 G 0167 | 20 G 0637 |
| 14 H 0881 | 15 H 0800 |
| 33 H 0374 | 52 H 0126 |
| 46 J 0567 | 51 J 0915 |
| 02 K 0148 | 04 K 0989 |
| 19 K 0641 | 35 K 0122 |
| 04 L 0721 | 08 L 0508 |
| 27 L 0810 | 42 L 0282 |
| 50 L 0344 | 18 M 0299 |
| 24 M 0729 | 25 M 0056 |
| 33 M 0998 | 38 M 0255 |
| 51 M 0120 | 12 N 0140 |
| 13 N 0303 | 48 N 0111 |
| 10 O 0780 | 29 O 0701 |
| 32 O 0404 | 47 O 0255 |
| 19 T 0848 | 23 T 0261 |
| 24 T 0075 | 46 T 0103 |
| 46 T 0347 | 15 Q 0393 |
| 18 Q 0663 | 26 Q 0346 |
| 35 Q 0389 | 39 Q 0765 |
| 27 R 0287 | 42 R 0227 |
| 43 R 0049 | 50 R 0122 |
| 31 S 0282 | 29 S 0323 |
| 34 S 0111 | 27 U 0664 |
| 02 U 0345 | 07 U 0675 |
| 02 V 0877 | 13 V 0027 |
| 43 V 0721 | 02 W 0780 |
| 22 W 0173 | 18 X 0366 |
| 20 X 0338 | 35 X 0893 |
| 38 X 0300 | 43 X 0290 |
| 43 X 0937 | 48 X 0755 |
| 10 Y 0117 | 09 Y 0240 |
| 40 Y 0656 | 45 Y 0545 |
| 10 Z 0266 | 21 Z 0972 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

## 500க்கு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

பல அணைக்கட்டுகள் உடைந்து வெள்ள பெருக்கெடுத்து பாய்வதாகவும் ஹரியானாவில் சாலை போக்குவரத்துக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது (உ)

## நால்வர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைந்தார். நால்வரையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை றிமாண்டில் வைக்கு மாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இக்கொள்ளை பற்றிய புலன்விசாரணைகளில் இன்ஸ்பெக்டர் காதர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார். கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை இன்ஸ்பெக்டர் காதர் யாழ்ப்பாணத்தில் உள்ள இரு நகைக் கடைகளில் இருந்து மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## எதிர்க்கட்சித்தலைமையால்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராடமுடியும். இளைஞர்கள் மேற்கொள்கின்ற போராட்டங்கள் உங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்களுடன்மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட திரு. தொண்டமானும் ஒன்றுபட்டு ஒரே குழுவாக இயங்குவோம். இன விடுதலைப் போராட்டங்கள் முன்செல்ல நாம் தயாராக உள்ளோம் எந்தத் தீயசக்தியாலும் எமக்கிடையே பிரிவுகள் ஏற்படா. நாம் இடமளியோம் நாம்கொண்ட இலட்சியமான தமிழ் ஈழத்தை நாம் அடைந்தே தீருவோம் என்றார்.

### விமானம் வந்தது

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றதன்பின்னர் முதல் தடவையாக யாழ். வருகை தந்த தலைவர் திரு. அமிர்தலிங்கத்தை வரவேற்க அதிகாலை 5 மணியில் இருந்தே மக்கள்கூட்டம் பலாலி விமான நிலையத்தை முற்றுகையிட ஆரம்பித்தது. திரு அமிர்தலிங்கமும் அணியாரும் வந்த விமானம் சரியாக 7-05க்கு பலாலி விமான நிலையத்தில் இறங்கியது. அங்கு குழுமியிருந்த மக்கள் மகிழ்ச்சி முழக்கமிட்டனர். அவர்களது ஆரவாரம் அந்த விமானம் இறங்குகையில் ஏற்பட்ட பேரிரைச்சலிலும் பெரிதாக ஒலித்தது. விமானம் வந்திறங்கியதும் திரு அமிர்தலிங்கம் இருகரம்கூப்பியவண்ணம் கீழிறங்கினார். அவருடன் அவரது துணைவியார் திருமதி அமிர்தலிங்கமும் விமானத்தில் வந்திருந்தார். விமான நிலையத்திலில்வைத்து சிறைமீண்டவர்களான மாவை சேனாதிராசாவும், வண்ணை ஆனந்தனும் முதலில் மலர்மாலை சூட்டி அவரை வரவேற்றபின் அங்கு குழுமியிருந்த ஆதரவாளர்கள் மாலை அணிவித்து அவரைச் சுமந்துகொண்டு வந்தனர். விமானநிலைய முன்மண்டபத்தில்வைத்து திரு. அமிர் உரையாற்றியதைத் தொடர்ந்து மேளவாத்திய இசையுடன் விமானநிலையச் சந்தி வரை பெருந்திரளான மக்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டார்.

விமான நிலையத்திற்குத் தனியார் பஸ்ஸில் வந்திருந்த 15 வயதிற்குட்பட்ட சுமார் 30க்கு மேற்பட்ட சிறுவர்கள் திரு. அமிர்தலிங்கத் தைக்கண்டதும் தமிழ் ஈழம் காண்போம் என்றவாறு கோஷமிட்டனர். விமான நிலையத்தில் சட்டத்தரணி திரு. ஆர். விஸ்வநாதன், திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. எஸ். நாதராஜா, திரு. என். ரி. செல்லத்துரை, திரு. தம்பு கந்தையா முதலான கூட்டணி பிரமுகர்களும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

### வழிமுழுவதும்

பலாலி நிலையச் சந்தியில் இருந்து கார் பவனியாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வழி எங்கனும் பூரண கும்பம் வைத்து வரவேற்கப்பட்டு மக்கள் வெடி கொழுத்தி மகிழ்ந்தனர்.

### வெளிநாட்டு பிரமுகர்கள்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை திரு. அமிர்தலிங்கம் வந்தடைவதற்கு முன்னர் இந்தியாவில் இருந்து வந்திருந்த 50க்கு மேற்பட்டயாத்திரிகர் குழுவொன்று தங்கள்கோஷ்டி தலைவராக வந்த எஸ். ரி. கண்ணப்பனும் அக்குழுப்பெண்கள் சார்பில் திருமதி எம். தேவகியும் திரு. அமிர்தலிங்கத்துக்கும் திருமதி அமிர்தலிங்கத்துக்கும் மிக ஆர்வத்துடன் மலர்மாலை சூட்டி மகிழ்ந்தனர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் உரையாடியபோது சில பெண்கள் கரம் கூப்பியபடி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அவர்களுடன் அளவளாவிய பின்னர் தமக்கென ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விசேட பூசையிலும் கலந்துகொண்டார். வடடுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் பூசையில் கலந்துகொண்டார். பூசை முடிந்ததும் திரு. அமிர்தலிங்கம் மாவிட்டபுரத்தில் தங்கியிருக்கும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய தேசிகரைச் சந்தித்து அவரது ஆசியையும் பெற்றுக்கொண்டார். (கா)

## தமிழ்காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபடப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

### சர்வகட்சி

### மகாநாட்டின் மூலம்...

ஒற்றை ஆட்சியின்கீழ் சர்வகட்சி மகாநாட்டின் மூலமே இந்தநாட்டின் தமிழ்மக்கள் பிரச்னைகள் யாவும் தீர்த்து வைக்கப்படும். இதுவே எனது தந்தையின் நீண்டநாள் குறிக்கோளாகும் என்றும் திரு. குமார் கூறினார். (கு-இ)

## வன்செயல்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவில் நீதித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய முக்கியஸ்தர் ஒருவரும், கட்சிகள் மூன்றினது பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

70ம் ஆண்டுக்குப் பின் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்கள் குறித்து நியமிக்கப்பட்ட சிறிவர்த்தன குழுவின் அறிக்கையை வெளியிடுவதென்றும் அரசு தீர்மானித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.